அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் : 152 /2017
தேதி : 05.12.2017

**காங்கிரஸ் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட**
**ராகுல்காந்தி அவர்களுக்கு**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்**
**நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் வாழ்த்து.**

இந்திய விடுதலையை முன்னெடுத்து 1885ல் தொடங்கப்பட்ட இந்திய தேசிய காங்கிரஸ், இந்தியாவின் மிகப்பெரிய பாரம்பரிய அரசியல் கட்சியாகும். இந்தியாவின் முதல் பிரதம மந்திரியான ஜவஹர்லால் நேரு அவர்களின் பரம்பரைத் தோன்றலான ராகுல்காந்தி அவர்கள் இந்திய தேசிய காங்கிரஸின் துணைத்தலைவர் பொறுப்பிலிருந்து கட்சியின் தலைவராக உயர்ந்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

அவரின் மக்களிடம் எளிமையாக பழகும் அணுகுமுறை, தொலைநோக்கு சிந்தனையுடன் கட்சியை வழிநடத்துவது போன்றவைகள் தொடர்ந்தால் அவரது கட்சிக்கு வலு சேர்க்கும். 2009ஆம் ஆண்டு நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் அமர கடுமையாக பணியாற்றியது அனைவரும் அறிந்தது.

மாநில சட்டப்பேரவை ஆனாலும், நாடாளுமன்றம் ஆனாலும் வலுவான எதிர்க்கட்சி இருந்தால்தான் ஜனநாயகத்திற்கும் வலிமைக்கூடும். தற்போது நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக இருக்ககூடிய காங்கிரஸ் 70 ஆண்டுகால சுதந்திர இந்தியாவின் நாடாளுமன்ற வரலாற்றில் நீண்டகாலம் ஆட்சிபுரிந்த அரசியல் கட்சியாக இருந்திருக்கிறது. தற்போதைய ஆட்சி மற்றும் அரசியல் நிலைமையில் எதிர்க்கட்சியின் செயல்பாடு மிகவும் முக்கியமானதாக கருதப்படும் நிலையில் ராகுல்காந்தி அவர்களுக்கு காங்கிரஸ் கட்சியின் தலைவராக ஜனநாயக கடமை ஆற்ற வேண்டிய பொறுப்பு அதிகம் உள்ளது.

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



குறுகிய காலத்தில் பெரிய தலைவர்கள் இயக்கிய இக்கட்சியை தலைசிறந்த முறையில் முன்னேற்றப்பாதையில் எடுத்துச் செல்ல முயற்சிக்கும் ராகுல் காந்தி அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த பாராட்டுகளையும், இளைய வயதில் எடுத்துக்கொண்ட பொறுப்பில் சிறப்பான செயல்பாட்டை மேற்கொள்ள மனமார்ந்த வாழ்த்துகளையும் என் சார்பிலும் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com